13/10/1951 M.V.M BAN, CONT,, 1.

போர்வாள்

வாள் 5 வீச்சு 6

13-10-51 சனிக்கிழமை

ஆசிரியர்கள்:
காஞ்சி. மணிமொழியார்
மா. இளஞ்செழியன் B A.Hons

துணை ஆசிரியர்:
காஞ்சி கல்யாணசுந்தரம்

விலை 2 அணா

சாட்டையடி கொடுத்த சிக்கந்தராபாத்

"ஆயிரம் கட்சிகள் புறப்பட்டு மே நாட்டிலே! மகாத்மா காந்தியால் வளர்க்கப்பட்ட எங்கள் மாபெரும் கட்சியை அசைக்க முடியுமா அவற்றால்!" "தேசமே காங்கிரஸ்! காங்கிரசே தேசம்! அப்படியிருக்க காங்கிரசை வீழ்த்த யாரால் முடியும்?"

"யானை போன்ற பலமும் செல்வாக்கும் படைத்தது எங்கள் காங்கிரஸ். அதனையா பூனைகள் போன்ற சின்னஞ்சிறு கட்சிகள் சாய்த்திட முடியுமா?"

"அகில இந்தியாவிலேயும் தழைத்து நிற்பது—அறுபதாண்டு காலமாக ஓங்கி வளர்வது—அண்ணல் நேருவின் ஆசீர்வாதம் பெற்றது—எண்ணத் தொலையாத தொண்டர்கள் நிறைந்தது—இத்தகு காங்கிரசை யார் என்ன செய்யமுடியும்?"

"கதிரவன் போன்றது காங்கிரஸ், அதன் சுடரொளி பட்டாலே கரைந்திடும் பனிக்கட்டிகள் போன்றன பிற கட்சிகள். வெண்ணிலா போன்றது காங்கிரஸ், அதன் முன் நிற்க வெட்கப்பட்டுக்கொண்டு அஞ்சி நடுங்கும் நட்சத்திரங்கள் போன்றன பிற கட்சிகள். அலை கடல் போன்றது காங்கிரஸ். அதை எதிர்த்துத் தாக்க எண்ணும் சின்னஞ்சிறு குழந்தைகள் போன்றன பிற கட்சிகள். இந்தக் கட்சிகள் எதிர்ப்பதாலேயா எங்கள் காங்கிரஸ் கரைந்து விடும்? ஒரு போதும் இல்லை."

"சிங்க ஏற்றினை எதிர்த்தால் சுண்டெலிகள் தப்ப முடியுமா? மதத்தான மலையுடன் மோதிக் கொண்டால் மண்டை உடையாமல் இருக்குமா? ஆகாய விமானத்துடன் போட்டி போட கட்டை வண்டிகளால் ஆகுமா? அதுபோலத்தான் காங்கிரஸ் இயக்கத்தை எதிர்க்கவோ வீழ்த்தவோ சில்லறைக் கட்சிகளால் முடியாது என்பது நிச்சயம்."

பாரத புத்திரர்கள் அடிக்கடி இதுபோலப் பேசுவது வழக்கம்.

அவர்களுடைய தேசிய ஏடுகள் வாரத்திற்கிருமுறை இத்தகு பல்லவியைப் பாடுவது வாடிக்கை.

காங்கிரஸ் மேடைகளிலே இத்தகு பேச்சு கிளர்ந்து எழாத நாட்களே கிடையாது.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் மட்டுமல்ல, மாற்றுக் கட்சிகளில் உலவுகிற நண்பர்களிற் கூட பலர் மகத்தானதோர் இயக்கமாயிற்றே காங்கிரஸ், அதனை வீழ்த்த நம்மால் ஆகுமா என்று பல முறை சோக கீதம் பாடி சோர்வுப் பாதையில் நடந்ததுண்டு.

ஆனால் சென்ற மாதம் ஹைதராபாத் சிற்றூரைச் சேர்ந்த சிக்கந்தராபாத் என்கிற ஊரிலே நடைபெற்றிருக்கிற நகராட்சி மன்றத் தேர்தல், எங்களை யார் வீழ்த்த முடியும் என்று இறுமாப்புடன் பேசிவந்த காங்கிரஸ் கனதனவான்களுக்குச் சரியானதோர் சாட்டையடி கொடுத்திருக்கிறது.

சிக்கந்தராபாத் கொடுத்திருக்கிற சாட்டையடி இலேசானதுமல்ல—எளிதில் மறந்து விடக்கூடியதுமல்ல.

அந்த அடியால் ஏற்பட்டிருக்கிற காயமும் இன்றில்லாவிட்டால் நாளை நிச்சயம் ஆறிவிடும் என்று சொல்லி ஆறுதல் அடையத்தக்க அவ்வளவு சிறியதல்ல.

அடியும் பலமானது. அடியால் ஏற்பட்டிருக்கிற காயமும் விரைவில் ஆற முடியாதது.

செப்டம்பர் திங்கள் 22 ஆம் நாள், சிக்கந்தராபாத் நகராட்சிக் கழகத்திற்குரிய இரண்டு உபதேர்தல்கள் நடைபெற்றிருக்கின்றன.

ஓர் உப தேர்தலிலே தோழர் ஏ. கே. பாலையா என்பவர் காங்கிரஸ் கட்சியின் பிரதிநிதியாக நின்றிருக்கிறார். அவரை எதிர்த்துத் தோழர் எம். பி. கிரி என்பவர் சமதர்மக் கட்சியின் பிரதிநிதியாகப் போட்டியிட்டிருக்கிறார்.

(5-ம் பக்கம் பார்க்க)

பேச்சிலே நாஸ்திகம்! செயலிலே ஆஸ்திகம்!

சமதர்ம சங்கநாதம், மேடைப் பேச்சில்! முதலாளித்வ முகாரி, காரிய உலகில்!

விசித்திரமானதோர் விவாக ரத்து

பண்டித நேரு—ஒரு படப்பிடிப்பு!

அழகான உருவம்—அருமையான தோற்றம் — ஆகர்ஷமான முகம்—ஒளி வீசும் கண்கள்—இன்பச் சிலை போன்ற உடலம்—கள்ளங் கபடமற்ற பார்வை—இப்படிப்பட்ட இயல்பும் நிலையும் படைத்தவர், டாக்டர் ஜெகில்.

அருவருப்பான உருவம்—அனைவராலும் வெறுக்கப்படும் தோற்றம்—அன்பையே அறியாத அழுக்கு முகம்—குரூரப் பார்வையைச் செலுத்தும் கொடிய கண்கள்—ஈவு இரக்கமற்ற பாவி எனத்தகும் உடலம்—இப்படிப்பட்ட பண்பும் அமைப்பும் வாய்ந்தவர், மிஸ்டர் ஹைட்.

தேன் போன்ற சொற்கள், தமிழ்த் தென்றல் போன்ற பழக்க வழக்கம், கற்கண்டு போன்ற நடத்தை, கனிச் சாறு போன்ற செய்கை—இவை டாக்டர் ஜெகிலுக்குரிய சிறந்த பண்புகள்.

தேளின் கொடுக்கு போன்ற சொற்கள், பாம்பின் விஷம் போன்ற பழக்க வழக்கம், வஞ்சகச் சிலந்தி போன்ற நடத்தை யார் யாரும் கண்டு வெறுக்கத் தக்க செய்கை—இவை மிஸ்டர் ஹைடுடன் பிறந்த 'அரிய' குணங்கள்.

அன்பு, அடக்கம், அறிவு, ஆற்றல், அமைதி, ஆராய்ச்சி, சாந்தம், சமாதானம்,—இவையெல்லாம் டாக்டர் ஜெகிலின் வாழ்க்கையில் ஒளி வீசித் திகழும் உன்னத வைரங்கள்.

வஞ்சகம், விரோதம், பொறாமை, புனை சுருட்டு, ஆத்திரம், ஆவேசம், ஆக்ரோஷம், அயோக்கியத்தனம் — இவையெல்லாம் மிஸ்டர் ஹைடின் வாழ்க்கையைச் சித்திரவதை செய்யும் சிலந்திக் கூடுகள்.

கொலை!—அந்த இரண்டெழுத்துச் சொல்லைக் கண்ணால் கண்டால் கூட அஞ்சி நடுங்குவார் டாக்டர் ஜெகில்.

கொலை!—அந்தச் சொல்லைக் கேள்விப்பட்டவுடனே அதுதான் என் அருமைத் தோழன் என்று ஆனந்தத்தோடு கூவி, ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டுப் பாடுவார் மிஸ்டர் ஹைட்.

கன்னக்கோலிடுவது, சுவர் ஏறிக் குதிப்பது, கள்ளத் தொழில் புரிவது, கழுத்தை முறித்துப் போடுவது,—இவைகளையெல்லாம் ஏறெடுத்தும் பார்க்காதவர் டாக்டர் ஜெகில்.

கொலை, கொள்ளை, களவு, வழிப்பறி, சித்திரவதை—இந்த ஐந்து செயல்களைச் செய்வதுதான் தான் பிறவியெடுத்ததால் ஏற்படவேண்டிய பெரும்பயன் என்ற எண்ண அலைகளிலே என்றென்றும் நீந்திக் கொண்டிருப்பவர் மிஸ்டர் ஹைட்.

டாக்டர் ஜெகில் அன்பே உருவாக வந்த அருளாளர் என்றால், மிஸ்டர் ஹைட் கொடுமையே வடிவெடுத்து நிற்கும் குரூபி.

ஒருவர் மந்தமாருதத் தென்றல் வீசும் பூந்தோட்டம். மற்றவர், அள்ளும் தணல் பரவிய பாலைவனம்.

ஒருவர் வடதுருவம். மற்றவர் தென் துருவம்.

ஒருவர் நெருப்பு. மற்றவர் குளிர்ச்சி.

ஆம்! டாக்டர் ஜெகில், மிஸ்டர் ஹைட் இவ்விருவரும், ஒருவருக்கொருவர் நேர்மாறான பண்பும் பழக்கமும் சொல்லும் செயலும் படைத்தவர்கள்.

ஆங்கிலப் பேராசிரியர் ஸ்டீவென்சன், "டாக்டர் ஜெகிலும் மிஸ்டர் ஹைடும்" என்ற பெயரிலே, அருமையானதோர் எழுத்தோவியத்தைத் தீட்டியிருக்கிறார்,

அந்த அழகான கருத்துக் கருவூலத்திலே வருகிற முக்கிய மான கதை உறுப்பினரின் பெயர்தான் டாக்டர் ஜெகில்.

டாக்டர் ஜெகில் பற்பல வகையான ரசாயன ஆராய்ச்சிகளைச் செய்து வருகிறார். அப்படிச் செய்துவருகிறபோது, ஒரு முறை, தற்செயலாக, அபூர்வமான ரசாயனக் கலப்புப் பொருள் ஒன்றை அவர் கண்டுபிடித்துவிடுகிறார்.

அந்த அபூர்வமான ரசாயனப் பொருள், தன்னை உண்பவர்களின் உள்ளம், உடல், சொல், செயல், பழக்க வழக்கம், பண்பாடு எல்லாவற்றையுமே நேர்மாறான முறையில் மாற்றி அமைத்து மறுகோலம் செய்துவிடும் தன்மை படைத்தது.

அந்த மருந்தை உண்டுவிட்டால், நல்லவர்களாக இருப்பவர்கள் தீயவர்களாக மாறுவர். அன்பே உருவாக இருப்பவர்கள் கொடுமையே வடிவாகச் சமைந்துவிடுவர். வஞ்சகம் என்றால் என்ன என்பதையே அறியாதவர்கள் மிகப்பெரிய வஞ்சகர்களாகத் தோற்றமெடுப்பர். கொலை கொள்ளை களவு என்கிற செயல்களைச் செய்திட அஞ்சி நடுங்கியவர்கள் அவற்றைப் புரிவதுதான் இனி எங்கள் வேலை என்று ஆனந்தத் தாண்டவமாடத் தொடங்கிடுவர்.

உண்மையிலேயே அந்த மருந்துக்கு அந்த ஆற்றல் இருக்கிறதா என்பதைத் திட்டவட்டமாகக் கண்டறிய வேண்டும் என்கிற ஆவல் ஏற்பட்டது டாக்டர் ஜெகிலுக்கு: உடனே மருந்தை அருந்தினார் அளவற்ற ஆவலுடன்.

விநாடிகள் சில சென்றன:
உடல் பதறிற்று.
கைகால்கள் நடுங்கின.
உள்ளம் குழம்பிற்று.

நாடி நரம்புகளெல்லாம் மின்சாரத்தால் தாக்குண்டதுபோல அதிர்ச்சி அடையலாயின.

அரை மணி நேரம் கழிந்தது.

டாக்டர் தன் உடலையே தான் பார்த்தார். அது தன் உடல் தானா என்பதை அவராலேயே கண்டறிய முடியவில்லை.

உடல், முற்றிலும் மாறிப் போயிருந்தது.

மருந்தை அருந்துவதற்கு முன்னர் தனக்கிருந்த அழகான உடல் அருவருப்பான தேகமாக மாறிப்போயிருந்தது. ஆனந்தமான முகம் குரூரமான தோற்றம் பெற்றிருந்தது. அன்பு ஒளி வீசிக்கொண்டிருந்த கண்கள் கொலைகாரனின் கொடூரக் கண்களாக உருமாறிவிட்டிருந்தன.

கண்ணாடியின்முன் சென்று, ஒரு கண நேரம் நின்று, தன் உடலை, உருவத்தை, புதிய தோற்றத்தை உற்றுக் கவனித்தார். பார்க்கவே சகிக்கவில்லை — அவ்வளவு பயங்கரமான தோற்றம்.

கண்ணாடியில் தன் தோற்றத்தைக் கவனித்துக் கொண்டிருக்கும்போதே, தன் உள்ளத்தில், யாரையாவது குத்திக் கொல்ல வேண்டும், உதைத்து மிரட்டிச் சித்திரவதை புரியவேண்டும், கைகால்களைக் கத்திகொண்டு அணு அணுவாகச் சிதைக்க வேண்டும் என்றெல்லாம் விபரீத உணர்ச்சிகள் உருவாவதை அறிந்தார். தன் உடல் மட்டுமல்ல உள்ளமும் மாறிப்போயிருக்கிறது என்பதைத் தெளிவாக அறிந்துகொண்டார்.

வெளியே புறப்பட்டார். யாரோ ஒரு வழிப்போக்கன் வந்துகொண்டிருந்தான். அவனை ஆக்ரோஷத்துடன் பிடித்து இழுத்து ஆவேசத்துடன் மேலே தள்ளிக் கழுத்தை முறித்துக் கொன்று போட்டுவிட்டார்.

இரண்டு மணி நேரம் இந்த "வெறி நிலை" அவருக்கு இருந்தது. பிறகு, படிப்படியாக, உண்ணுக்கு அருந்திய மருந்தின் சக்தி குறையலாயிற்று. குறையவே, அவருடைய புதிய ஆவேசமும் புதிய உருவமும் புதிய உள்ளமும் கொஞ்சம் கொஞ்சமாக மாறி சில மணி நேரத்துக்குப் பின்னால் பழைய நிலையைப் பரிபூரணமாகப் பெற்றுவிட்டது.

அடிக்கடி மருந்தை அருந்துவார். அருந்திய பிறகு ஆவேச உருவமும் ஆக்ரோஷ உள்ளமும் ஏற்படும். மருந்தின் சக்தி மறைகிறவரையிலே இந்த நிலை நீடிக்கும். பிறகோ பழைய உருவமும் உள்ளமும் மீண்டும் திரும்பிவிடும்.

ஆவேச நிலையிலே இருக்கிற போது, டாக்டர், கொலை—கொள்ளை—சித்திரவதை— எத்தகைய கொடுஞ் செயலையும் செய்யத் தயங்கமாட்டார். ஆனால் அந்த நிலை மாறி, தன் இயற்கை நிலை—சுவைவரப் பெற்றதும், அப்படியெல்லாம் செய்துவிட்டதற்காகக் கண்ணீர் விட்டுக் கதறி அழவும் தயங்கமாட்டார்.

ஆவேச நிலையிலே அவர் இருக்கிறபோது அவர்தான் டாக்டர் ஜெகில் என்று அவரே கூறினால்கூட உலகம் ஒப்புக்கொள்ள மறுத்தது. உருவமும் சரி, உள்ளமும் சரி, அந்த அளவுக்கு முற்றிலும் மாறிப் போயிருந்தது. எனவேதான், அவர் ஆவேச நிலையில் இருந்த போது, தன்னை மிஸ்டர் ஹைட் என்கிற பெயரால் அறிமுகப் படுத்திக்கொண்டார்.

டாக்டர் ஜெகில் — மிஸ்டர் ஹைட்—இவர்கள், தனித்தனி

(6-ம் பக்கம் பார்க்க)

அங்கே அப்படி! இங்கே இப்படி!

அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து, ரஷ்யா, ஆப்ரிகா, ஆஸ்திரேலியா போன்ற வெளி நாடுகளில் அடிக்கடி பெரிய பெரிய கட்டிடங்கள் கட்டப்படுகின்றன.

அந்தக் கட்டிடங்களிலே, சில, பொதுமக்களின் குடியிருப்புத் தேவையை நிறைவு செய்வதற்காக எழுப்பப்படுகின்றன.

வேறு சில, விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடங்களை நிறுவி மனித வாழ்க்கையை வளமாக்குவதற்கான நற்பணியைத் தொடங்குவதற்காக எழுப்பப்படுகின்றன.

மற்றுஞ் சில, பெரிய பெரிய தொழிற்சாலைகளை உண்டாக்கி நாட்டுக்குத் தேவையான நல்ல பல பண்டங்களை உற்பத்தி செய்வதற்காக எழுப்பப்படுகின்றன.

இன்னும் சில, சிறந்த வணிக அமைப்புகள் இருந்து பணியாற்றுவதற்குத் தேவையானவை என்று கருதி உருவாக்கப்படுகின்றன.

கல்விச்சாலைகள்—மருத்துவ மனைகள்—ஆராய்ச்சிக் கூடங்கள்—வணிக நிலையங்கள்—பல்வகை தொழிற்சாலைகள் — குடியிருக்கும் வீடுகள் — ஆட்சியாளர் அலுவலகங்கள் என்னும் இன்னோரன்ன பல அமைப்புகளை முன்னிட்டு அங்கெல்லாம் கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன.

நம் இந்தியாவிலேயும் அக்டோபர் முதல் தேதி மிகப் பெரியதோர் கட்டிடம் நிறுவப்பட்டிருக்கிறது.

எத்தகு பணி புரிவதற்காக அத்தகு கட்டிடம் கட்டப்பட்டிருக்கிறது என்று கருதுகிறீர்கள்?

கல்விச்சாலை ஒன்றை நடத்தி இளைஞர்களின் இதயத்திலெல்லாம் அறிவுத் திருவிளக்கை ஏற்றிவைப்பதற்காகவா?

அல்ல!

மருத்துவ நிலையம் ஒன்றைத் தொடங்கி மக்களின் நோய் நொடிகளைத் தீர்த்து வைக்கும் மகத்தான பணி புரிவதற்காகவோ?

இல்லையாது!

விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடம் ஒன்றை நிறுவி, மக்கள் வாழ்க்கையை மேலும் சிறப்படையச் செய்வதற்கான சிறந்த கருவிகளைக் கண்டுபிடித்து, நாட்டு மக்கள் முன்னால் நிறுத்திக் காட்டுவதற்கா?

இல்லை!

குடியிருக்க வீடின்றித் தவிக்கும் கோடிக் கணக்கான மக்களிலே ஒரு சிலரையாவது உல்லாசமாக வாழவைத்து இன்பபுரியில் உலவச் செய்வதற்கா?

அதற்கும் அல்ல!

அப்படியானால் எதற்காகத்தான் அந்தக் கட்டிடம் கட்டப்படுகிறது — அன்புகூர்ந்து தெரிவியுங்கள் என்கிறீர்களா?

கேளுங்கள் அந்தக் கோலாகலத்தை!

ரூபா 47 000 செலவிலே, திருப்பதி மலையிலே, அக்டோபர் முதல் தேதியிலே மகத்தானதோர் கட்டிடம் மட மடவென எழுப்பப்பட்டிருப்பது எதற்காகவாம் தெரியுமா?

எல்லாம் வல்ல ஆண்டவனுக்கு அன்புக் காணிக்கையாக நம்முடைய தலைமயிரைக் கத்தரித்துத் தருகின்ற "பகவத் காரியம்" புரிவதற்காகவாம்!

கேளுங்கள் தோழர்களே வெட்கக்கேட்டைக் கேளுங்கள். எல்லாம் வல்ல ஆண்டவனுக்குக் காணிக்கை கேவலம் நம்முடைய தலைமயிர்! அந்தத் தலைமயிர்க் காணிக்கையைச் செலுத்தத் தனியானதோர் கட்டிடம்!

இவ்வளவு வெட்கரமான நிலைமை இந்த நாட்டைத் தவிர வேறு எந்த நாட்டிலே இருக்க முடியும்?

ஆஸ்திக உலகின் கருத்துப்படி, உலகைப் படைத்தவன் ஆண்டவன். உலகில் உயிர்களைப்படைத்தவன் ஆண்டவன். அந்த உயிர்கள் வாழ உணவைப்படைத்தவன் ஆண்டவன். அந்த உணவைத் தரும் செடி கொடிகளைப் படைத்தவன் ஆண்டவன். அந்தச் செடி கொடிகள் தழைக்கக் கீழே நிலத்தையும் மேலே சூரிய ஒளியையும் படைத்தவன் ஆண்டவன். வயல்களைப் படைத்தவன் ஆண்டவன், அந்த வயல்களை வளமாக்க ஏரிகளைப் படைத்தவன் ஆண்டவன், அந்த ஏரிகளுக்கு நீர் பாய்ச்ச மழையைப் படைத்தவன் ஆண்டவன். அந்த மழையைப் பொழியும் மேகங்களைப் படைத்தவனும் ஆண்டவன், இவ்வளவையும் படைத்த ஆண்டவனுக்கு நம்முடைய அன்பின் அறிகுறியாக, நன்றி தெரிவிப்பாக, பாராட்டுரைமடலாக, கேவலம் நம்முடைய தலைமயிரைத் தருவது என்றால் அந்தச் செயல் ஒன்று அயோக்கியத்தனமாக இருக்கவேண்டும் அல்லது முட்டாள்தனமாக இருக்கவேண்டும். இரண்டும் இல்லையென்றால் ஆணவச் செயலாகவாவது இருக்க வேண்டும்.

தலைமயிர் உட்பட உலகில்உள்ள எல்லாப் பொருள்களையும் படைத்தவன் ஆண்டவன் என்பது ஆஸ்திக அன்பர்களின் சித்தாந்தம்.

எல்லாப் பொருள்களையும் படைத்த ஆண்டவனுக்கு, அவன் படைத்த பொருள்களிலேயே ஏதோ ஒன்றை எடுத்து, "இதோ எங்கள் அன்புக் காணிக்கை" என்று அவனிடமே தருவதென்றால், இதைவிட அயோக்கியத்தனம் அல்லது ஆணவச் செயல் வேறென்ன இருக்கமுடியும்?

காணிக்கையாகத் தரப்படும் பொருள் கை அல்ல—கால் அல்ல—கேவலம் தலைமயிர்! பக்த சிகாமணிகள் தங்கள் கையையோ காலையோ வெட்டி எடுத்து ஆண்டவனுக்குக் காணிக்கையாகத் தந்தாலாவது, அந்தச் செயலிலே அறிவுடைமை இல்லை என்றபோதிலும், ஆண்டவனிடம் உள்ள பக்தி காரணமாக எதையும் இழக்கத் தயாராயுள்ள தியாக சிந்தை இருப்பதை எண்ணி அந்தச் செயலை நாம் பாராட்ட முடியும்.

ஏனெனில் கைகளையோ கால்களையோ ஒருமுறை வெட்டிஎடுத்துவிட்டால் அவை மீண்டும் வளரமாட்டா. ஆனால் தலைமயிரோ வெட்ட வெட்ட வளரும் பண்பு படைத்தது. ஆண்டவனுக்கு அன்புக் காணிக்கையாகச் செலுத்த

படாவிட்டால்கூட அடிக்கடி முடி திருத்தும் சாலை மூலய' வெட்டி எறியப்பட வேண்டிய நிலையில் இருப்பது. ஆண்டவனுக்குத் தரப்படாவிட்டாலும் இயல்பாகவே வெட்டி எறியப்படவேண்டிய நிலையில் இருக்கும் ஒரு பொருளை ஆண்டவனுக்காகவே வெட்டித் தருவதாக நாம் கூறினல், அந்தப் பொய்யுரையைக்கேட்டு அவ்வளவு எளிதில் ஏமாந்துவிடக் கூடியவரா ஆண்டவன்? "ஏடா பக்தா யாரையடா ஏமாற்றப் பார்க்கிறாய்?" என்று ஆண்டவன் பக்தர்களைப் பார்த்து வாய்விட்டுக் கேட்காவிட்டாலும் மனதிற்குள்ளாகவாவது எண்ணமிடாமலா இருப்பார்?

ஒருவரிடத்தில் அன்பு செலுத்துவதாகச் சொல்லிக்கொண்டே அவரை ஏமாற்றப் பார்த்தால் அந்தச் செய்கையை அயோக்கியத்தனம் என்று அழைக்காமல் வேறு எந்தப் பெயரால் அழைப்பது?

ஆகவேதான் பகுத்தறிவாளர்களெல்லாம் ஏழுமலையானுக்கு முடி மயிரைக் காணிக்கை தருவதாகக் கூறுவதன் பெயர், பக்தி அல்ல பச்சை அயோக்கியத்தனம் என்று கூறுகின்றனர்.

இப்போதோ, இந்த விபரீதச் செயலைப் புரிவதற்காகப் பெரியதோர் கட்டிடமே எழுப்பப்பட்டு விட்டது திருப்பதி மலைமீது!

மேல் நாடுகளிலெல்லாம் விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் தொழிற்சாலை வளர்ச்சிக்கும் வாழ்க்கை மேம்பாட்டுக்கும் குடியிருப்பு வசதிக்கும் கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன.

ஆனல் இங்கோ? ஆண்டவனை ஏமாற்றுவதற்காகவென்றே கட்டிடங்கள் எழுப்பப்படுகின்றன. வேதனை! வேதனை!!

அங்கே அப்படி! இங்கே இப்படி! உங்கள் உள்ளம்—எப்படி?

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

காக அவர் கையாளும் தேர்தல் தந்திரமே தவிர, பாட்டாளிகளின் நிலையைக் கண்டு அவர் உண்மையாகவே பரிதாபப் படுகிருர் என்று யார்தானுகட்டும் எப்படி நம்பமுடியும்.

பாட்டாளிகளின் பரிதாப நிலையை ஒழித்துக் கட்டி, வாழ்க்கையின் கூட்டாளிகளாக அவர்களைமாற்றி அமைத்து மறுவடிவம் செய்வதற்குத் தேவையான அதிகாரம் இருந்தது. ஆட்சிப் பொறுப்பும் இருந்தது அவரிடத்திலே! தேவையான வசதிகள் இருந்தன, போதுமான செல்வாக்கும் இருந்தது அவர் கரத்திலே! ஆனாலும் அவர் சென்ற ஐந்து ஆண்டுகளாக இந்தத் துறையை ஏறிட்டுப் பார்க்கவும் மறுத்துவிட்டார். ஆனல் இப்போது வீசுகிருர் பாட்டாளி—வறுமை — வேலையில்லாத் திண்டாட்டம்—வேதனை என்று உள்ள பல்வேறு சொற்களை.

யார் ஏமாந்து விடுவார்கள் நைந்துபோன இந்தப் பழைய தந்திரத்தைக் கண்டு?

பக்தவச்சலங்கள் கையாண்டாலும் சரி, பண்டித நேருக்களே கையாண்டாலும் சரி, இந்தத் தேர்தல் தந்திரங்கள் எல்லாம் மக்களை ஏமாற்றி மீண்டும் ஆட்சிப் பீடத்தில் அமர்வதற்காக இவர்கள் தயார் செய்து வைத்திருக்கும் சூழ்ச்சிப் பொறிகள் என்பதை நாடு நன்ருக அறிந்துகொண்டிருக்கிறது.

முன்போல் இல்லை நாடு. நன்ருக விழித்துக் கொண்டிருக்கிறது இதுபோது.

காங்கிரஸ் கண்ணியவான்கள் இந்த உண்மையைத் தங்கள் உள்ளத்தில் பதியவைத்துக் கொள்ள வேண்டும் என்பது நம் ஆசை. பதிய வைத்துக் கொள்வார்களா?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்ருேர் உபதேர்தலிலே, ஒரு காங்கிரஸ் வாதி, ஒரு சுயேச்சை வாதி, ஒரு சமதர்ம வாதி ஆக மூன்று பேர் போட்டியிட்டிருக்கிருர்கள்.

இரண்டு தேர்தல்களும் நடந்து முடிந்த பிறகு வழக்கம் போல் ஓட்டுகளை எண்ணிப் பார்த்து வெற்றி—தோல்விகளை அறிவித்திருக்கிருர் தேர்தல் அதிகாரி,

முடிவு என்ன ஆயிற்று தெரியுமோ?

இரண்டு தொகுதிகளிலும் காங்கிரஸ் படு தோல்வி அடைந்திருக்கிறது.

காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட தோழர்கள், இரண்டு இடங்களிலேயும் தாங்கள் கட்டிய ஜாமீனைக்கூடத் திருப்பிப் பெற முடியவில்லை. அந்த அளவுக்கு அருவருக்கத்தக்க தோல்வி அடைந்திருக்கிருர்கள்.

ஒரு காங்கிரஸ் வாதி, ஒரு சமதர்ம வாதி ஆகிய இரண்டு பேர் மட்டுமே போட்டியிட்ட தொகுதியிலே சமதர்மவாதி பெற்றுள்ள ஓட்டுகளின் எண்ணிக்கை 1141. ஆனல் அவரை எதிர்த்து நின்ற காங்கிரஸ் தோழர் பெற்றுள்ள ஓட்டுகள்—எழுதிக் காட்டவேவெட்கமாக இருக்கிறது நமக்கு—42.

1141— எதிர்க்கட்சித் தோழருக்கு!

42—காங்கிரஸ் கட்சி அன்பருக்கு!

இதைவிட வெட்கக் கேடான நிலை வேறென்ன ஏற்பட முடியும் காங்கிரசுக்கு?

காங்கிரஸ் வாதி-சமதர்ம வாதி-சுயேச்சை வாதி ஆகிய மூவர் போட்டியிட்ட தொகுதியிலேயும் காங்கிரஸ் கட்சிக்கு இதே வகையான இன்பப் பரிசு தான் கிடைத்திருக்கிறது

மூவர் போட்டியிட்ட தொகுதியிலே, சமதர்ம வாதி பெற்ற ஓட்டுகள் 1356. சுயேச்சை வாதி பெற்ற ஓட்டுகள் 350. ஆனல் பரிதாபத்திற்குரிய பாரத புத்திரர் பெற்றுள்ள ஓட்டுகளோ-ஐயோ பாவம்-76.

1536- எதிர்க்கட்சிப் பிரதிநிதிக்கு!

76-காங்கிரஸ் கட்சி உறுப்பினருக்கு!

காங்கிரசே தேசம், தேசமே காங்கிரஸ் என்று ஓயாமல் பேசுகிருர்களே உரத்த குரலெடுத்து, அந்த உத்தமோத்தமர்கள் தங்கள் உள்ளத்தில் பொறித்து வைத்துக் கொள்ளட்டும் இந்த ஓட்டு வேறுபாட்டை.

1141 எதிர்க் கட்சிக்கு! கேவலம் 42 காங்கிரசுக்கு!-இது ஒரு தொகுதியில்!

1536 எதிர்க்கட்சிக்கு! பரிதாபத்திற்குரிய 76 காங்கிரசுக்கு!-இது, மற்ருெரு தொகுதியில்!

இப்போது கூறுங்கள் நண்பர்களே, எங்களை வீழ்த்த எவரால் முடியும் என்று எக்காளமிட்டு வந்த காங்கிரஸ் கனவான்களுக்கு, இக்கத்தராபாத் சரியானதோர் சாட்டையடியைத், தந்திருக்கிறதா இல்லையா?

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யான இரண்டு மனிதர்கள் அல்லர். ஒரே மனிதரின் வெவ்வேறான இரண்டு நிலைகள்.

அன்பையும் அடக்கத்தையும் தன் இரு கண்கள் எனக் கொண்டிருக்கும் டாக்டர் ஜெகில்தான், மருந்தை அருந்தியவுடனே, குரூரத்தையும் கொடுமையையுமே தன் இருதய கீதங்களாக எண்ணி மகிழும் மிஸ்டர் ஹைடாக மாறிவிடுகிறார்.

ஸ்டீவென்சன் தீட்டிய சிறந்ததோர் கதையிலே வருகிற சம்பவம் இது.

இந்தியாவின் முதலமைச்சர் பண்டித ஜவகர்லால் நேருவின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனிக்கும் எவருக்கும் "டாக்டர் ஜெகில்—மிஸ்டர் ஹைட்" சம்பவம் நினைவுக்கு வாராமற் போகாது.

பண்டித நேரு, மேடைமீதேறிநின்று, பல்லாயிரக்கணக்கான மக்களைப் பார்த்து, வீர முழக்கம் புரிகிறபோது, டாக்டர் ஜெகிலாக இருக்கிறார்—சிறந்த சீர்திருத்த வாதியாகக் காட்சி அளிக்கிறார் — பொதுவுடமை, புது வாழ்வு, பகுத்தறிவு, மதச் சார்பற்ற ஆட்சி என்று ஏதேதோ பேசுகிறார்—வாலிபர்களின் உள்ளத்திலெல்லாம் இன்பத் தேனைப் பாய்ச்சுகிறார்.

ஆனால் அதே நேரு, மேடையை விட்டுக் கீழே இறங்கி, பேச்சுத் துறையை மறந்து செயல் துறைக்குள் நுழைகிறபோது மிஸ்டர் ஹைடாக மாறிவிடுகிறார்—கடைந்தெடுத்த பிற்போக்குவாதியாகத் தோற்றமளிக்கிறார்—முதலாளி உலகத்தின் தோழனாகவும் வைதீக வட்டாரத்தின் பாதுகாவலனாகவும் புதுஉருவம் பெற்றுவிடுகிறார்.

தேன் கொட்டுகிறது அவருடைய சொற்களிலே!

ஆனால், தேள் கொட்டுகிறது அவருடைய செய்கைகளிலே!

தென்றல் வீசுகிறது அவருடைய மேடைப் பேச்சிலே!

ஆனால் விஷவாடை அடிக்கிறது அவருடைய காரியங்களிலே!

முற்போக்குவாதி — மேடைமீது நிற்கிறபோது!

பிற்போக்கின் சின்னம்— கீழே இறங்கிய பிறகு!

புத்துலகத் தூதுவர் — சொல்லின் செல்வராக விளங்குகிறபோது!

புராண காலப்பூசார்—செய்கை வீரராக உலவுகிறபோது!

முதலாளித்வத்தின் முதுகெலும்பை முறித்தே தீருவேன்—இது, பண்டித நேரு, சொற்களை வைத்து விளையாடுகிறபோது!

வெறும் இலட்சியங்களைப் பேசிவிட்டால் போதுமா-இருக்கிற சூழ்நிலைக்கு உட்பட்டுத்தானே காரியமாற்ற முடியும்—உடனடியாகச் சமதர்ம வாழ்வு எப்படிக் கிடைத்துவிடும் — பொறுமையாக இருப்போம் புதுவாழ்வு பிறகு கிடைக்கும்—இது, பண்டித நேரு, காரிய உலகத்தில் உலவுகிறபோது!

வாய்ச் சொல்லில் வீரராக விளங்குவது — ஆனால் காரியத்தில் கோழையாகத் திகழ்வது

மேடைமீது டாக்டர் ஜெகிலாக ஒளிவீசுவது — ஆனால் செயல் உலகில் மிஸ்டர் ஹைடாகப் பவனி வருவது

சொற்களைப் பொறுத்தவரை ஒப்பற்ற இலட்சிய புருஷராகக் காட்சி அளிப்பது

செயல் துறைக்கு வந்தாலோ "சே! சே! இப்படியுமா ஒரு மனிதர்வாழ்வது" என்று இலட்சியவாதிகளால் ஏசப்படும் நிலை பெறுவது.

இந்த இரட்டை வாழ்வின் பெயர்தான் பண்டித ஜவகர்லால் நேரு!

நாமல்ல இப்படிக் கூறுவது—அவருடைய வாழ்க்கை வரலாறு! பண்டித நேருவின் வாழ்க்கை வரலாற்றை மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்கள் கூட இந்த உண்மையைக் கட்டாயம் ஒப்புக் கொள்வார்கள்.

அவருடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலேயும், அவர், "சொல் வேறு—செயல் வேறு" என்கிற இரட்டை நிலையினராகத்தான் இருந்துவந்திருக்கிறார்.

"நான் ஓர் நாஸ்திகன்—ஆண்டவனிடத்திலே எனக்கு நம்பிக்கை இல்லை—மதமூட நம்பிக்கைகளிலே எனக்குப் பற்று கிடையாது—எனவே நான் ஆண்டவன் சாட்சியாக என்று கூறிச் சத்தியம் செய்யமாட்டேன்" என்று, அன்றோர் நாள், வழக்கு மன்றத்திலே வீர முழக்கமிட்டார் பண்டித நேரு இந்தச் செய்தி, நாளிதழ்களிலே வந்தபோது, புதுஉலகம் பூரிப்படைந்தது. இளைஞர்களின் இதயம் இன்பத்தால் மலர்ந்தது. பகுத்தறிவுவாதிகளின் உள்ளம் களிப்

"போர்வாள்" சந்தா விவரம்

★

ஓராண்டு ரூ. 6 8 0
6 மாதம் ரூ. 3 4 0

போர்வாள் அலுவலகம்
பவழக்காரத் தெரு,
சென்னை 1.

புக் கடலில் துள்ளிக் குதித்திடலாயிற்று. இந்தியத் துணைக் கண்டத்தில் எங்கெங்கும் நிறைந்திருக்கும் மூட நம்பிக்கைக் காடுகளை வெட்டி வீழ்த்த இப்படிப்பட்ட மாவீரரால்தான் முடியும் என்று முற்போக்குவாதிகளெல்லாம் வாய்விட்டுப் பேசலாயினர்.

ஆனால் பிறிதோர் நாள், அன்பர் ஜவகர்லாலின் அருமை மனைவியார் கமலா நேரு மறைந்தபோது, வேதம் வகுத்த வழிப்படி, கனபாடிகள் காட்டிய முறைப்படி, சாஸ்திரங்கள் இட்ட கட்டளைப்படி, மார்பிலே தெளியும் பூணூலை உருவி விட்டபடி, பண்டித நேரு, கங்கையாற்றிலே அந்த அம்மையாரின் அஸ்தியைக் கரைத்தபோது, இதன் பெயர்தானா நாஸ்திகம் என்று கேலிக் குரல் எழுப்பி அவரை எள்ளி நகையாடிற்று பகுத்தறிவு உலகம்.

பேச்சிலே நாஸ்திகம்! செயலிலே ஆஸ்திகம்! பொருந்துமா ஒன்றுடன் ஒன்று? கேட்டது உலகம்! விடை பகர்ந்தாரா ஜவகர்? பகர முடியுமா ஜவகரால்? வாய்மூடி மௌனியாகவும், பதில் பேசாப் பதுமையாகவும் மாறினார். வேறெப்படி மாற முடியும் அவருடைய சொல்லுக்கும் செயலுக்குமிடையே மிக நீண்ட இடைவெளி இருக்கும் போது?

* * *

பெய்ஸ்பூரிலே, பல ஆண்டுகளுக்கு முன்பு, அகில இந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற்றபோது, அந்த மாநாட்டின் தலைவராக அமர்ந்த அன்பர் ஜவகர் பொதுவுடைமைக் கீதமோம் பிணி போக்கும் நாதம் என்று கவிதை நடையிலே சமதர்மச் சொற்பொழிவை ஆற்றினார். "இதயமெலாம் அன்பு நதியினில் நனைப்போம்—இது எனது என்னும் மோர் கொடுமையை ஒழிப்போம்'' என்று விண்ணதிர முழக்கமிட்டார். "மிகப் பலர் உழைத்து மாள மிகச் சிலர் உண்டு கொழுப்பதா—கூடாது இந்தக் கொடுமை'' என்று புரட்சி முரசு கொட்டினார். மாஸ்கோ மார்க்கமே இந்தியாவுக்குரிய மார்க்கம் என்று திட்டவட்டமாகப் பேசினார்.

ஆனால் 1947 முதல் ஆட்சிப் பொறுப்பு அவர் கைக்கு மாற்றிற்றே—சமதர்ம சகாப்தத்தை இந்தியாவில் தொடங்கி வைத்தாரா அந்த "அரும் பெருந்" தலைவர்?—இல்லை—முதலாளித்வப் பாதையிலே தான் இந்தியாவை இழுத்துச் செல்லலானார்.

ஏன்?

ஏன் என்றால் என்னவென்று கூறலது?

சொல்வது ஒன்று! செய்வது வேறொன்று! அப்படி நடப்பவர் தான் பண்டித ஜவகர்!

ஆம்! அப்படித்தான் விடை கூற வேண்டும்.

* * *

பேச்சுரிமையும் எழுத்துரிமையும்தான் ஜனநாயகத்தின் இரு கண்கள் என்று, பண்டித நேரு, இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னால், ஆயிரமாயிரம் மேடைகளிலே, அழகான ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றியிருக்கிறார். ஆனால் இந்தியாவின் ஆட்சித் தலைவராக அவர் மாறிய பிறகு பேச்சுரிமையையும் எழுத்துரிமையையும் பறிப்பதற்கான படுமோசமான சட்டங்கள் பலவற்றை அவரே கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கிறார்.

* * *

வழக்கு மன்றத்தில் நிறுத்தப்பட்டு சட்டப்படி குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டால் ஒழிய எவரையும் சிறைவைப்பது அடாது—ஆகாது என்று அவரைப்போல ஆதார பூர்வமாக வாதாடியவர்கள் இந்தியாவிலேயே வேறு கிடையாது. ஆனால் பிரதமர் பீடத்தில் அமர்ந்த பிறகு எதிர்க் கட்சித் தோழர்களை விசாரணையின்றிக் காவலில் அடைக்க ஆறுமாதயார் என்று துள்ளிக் குதித்தவரும் அவரைப் போல வேறு கிடையாதுதான்.

* * *

பத்திரிகைகளுக்கும் ஜாமீன் கேட்பதா? சித்தனைகளை வெளியிடுவதற்கும் தடை விதிப்பதா? என்ன அக்கிரமம்! எத்தனைப்

(10-ம் பக்கம் பார்க்க)

பண்ணைக்காரன்

தோழர் S. D. பாட்சா அவர்களால் சித்தரிக்கப்பட்ட 'பண்ணைக்காரன்' என்ற சமூக நாடகம் 30-6-51-ல் சென்னை ஒற்றைவாடை தியேட்டரில் திரு. V. நாகய்யா தலைமையில் நடிக்கப்பட்டது. மக்கள் சமுதாயத்திலுள்ள சீர்கேடுகளும் அவை சீர்திருந்துவதற்கான வழிவகைகளும் வகுக்கும் உன்னத கலைச்சித்திரமே 'பண்ணைக்காரன்'

நடிகர்கள் ஒவ்வொருவரும் உணர்ச்சி ததும்ப திறம்பட நடித்திருக்கிறார்கள். கதை, வசனம் பாட்டு, சீன் ஜோடனை எல்லாம் நன்கு அமைந்திருந்தன. நாடக முடிவில்,

நாட்டில் நல்ல கருத்துக்கள் பரவவும், மக்கள் நிலை உயரவும், இதுபோன்ற நாடகங்களே தேவை எனத் தலைவர் எடுத்துக் காட்டி நடிகர்களைப் பாராட்டிப் பேசினார்.

போர்வாள்

சென்னை 13—10—51 சனிக்கிழமை

புதிய தேர்தல்— பழைய தந்திரம்!

"நீங்கள் மட்டும் என்னை உங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்துவிடுங்கள் - அதன்பிறகு நீங்கள் காலால் இட்ட வேலையை நான் என் தலையால் செய்து முடிக்கிறேனா இல்லையா பாருங்கள்!"

"உங்கள் சித்தம் என்றன் பாக்கியம். உங்கள் கட்டளையை நிறைவேற்றுவதே என்னுடைய முதற்பெருங் கடமை"

"நீங்கள் எனக்கு எஜமானர் போல! நான் உங்களுக்கு வேலைக்காரன் போல! இனி உங்கள் ஆசையை, ஆர்வத்தை, ஆவல்களைப் பூர்த்திசெய்துவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன் நான்!"

"பள்ளிக்கூடமா? மருத்துவ நிலையமா? பழுதற்றபாதைகளா? அண்டையில் ஓடும் ஆற்றின்மீது அழகானதோர் பாலம? எது வேண்டுமென்று நீங்கள் சொன்னாலும் சரி, உடனடியாக நான் முடித்துவைப்பேன்."

"உங்களுடைய இன்பதுன்பங்கள் இனிஎன்னுடைய இன்பதுன்பங்கள். உங்களுடைய வாழ்வு தாழ்வு இனி என்னுடைய வாழ்வு தாழ்வு. நீங்கள் சீரும் சிறப்பும் எய்தினால் நான் சீரும் சிறப்பும் எய்தியதாகப் பொருள்."

"நீங்கள் வேறு நான் வேறு என்பது கிடையாது. நீங்கள் தான் நான். நான்தான் நீங்கள். ஏன் நான் சொல்வதில் நம்பிக்கை பிறக்கவில்லையா உங்களுக்கு? பார்த்துக் கொண்டே இருங்களேன்! தேர்தல்மட்டும் முடியட்டும்! அதன் பிறகு நான் சொல்வது எவ்வளவு உண்மை என்பதை நீங்களே தெரிந்து கொள்ளப் போகிறீர்கள்!"

பொதுத்தேர்தலிலே அபேட்சகராக இருந்து, எம். எல் ஏ., வாக உயர்ந்து, சட்ட மன்றத்திற்குள் நுழைந்து, அந்த ஆநந்தமான கட்டிடத்திலே ஆர்வத்துடன் வீற்றிருக்க ஆசைப்படுபவர்கள், தேர்தல் நடைபெறுவதற்கு முந்திய விநாடிவரையிலே, வாக்காளர்களைப் பார்க்கிறபோது, மேலே பொறித்துள்ளபடியெல்லாம்தான் கூனிக்குழைந்து கும்பிட்டுக் கூத்தாடுவது வாடிக்கை.

ஆனால் அதே அன்பர்கள், அதே வாக்காள நண்பர்களை, தேர்தல் முடிந்து, சட்ட மன்றத்திற்குள் நுழைந்து, எம்.எல். ஏ., வாக மாறிப் பிறந்த பிறகு சந்திக்க நேர்ந்தால், அவர்களுடைய பார்வையும் பேச்சும், நடத்தையும் போக்கும் மேலே கண்டவிதமாகவா இருக்கும்? அதுதான் இல்லை!

"எம். எல். ஏ—எம் எல். ஏ—என்று எப்பொழுது பார்த்தாலும் என்னை நச்சரிக்கிறீர்களே? எனக்கென்ன வேறு வேலை கிடையாதா? எப்பொழுது பார்த்தாலும் உங்களோடு மாரடிப்பது தானா எனக்கு வேலை?"

"என்னமோ ஏதோ நீங்களும் எனக்கு இரண்டு ஓட்டுப்போட்டீர்கள்! உண்மைதான்! அதற்காக? என்னுடைய வேலை வெட்டியையெல்லாம் விட்டுவிட்டு அல்லும் பகலும் அறுபது நாழிகையும் உங்களோடா நான் சுற்றிக் கொண்டிருக்கமுடியும்?"

"பாலம் — பள்ளிக்கூடம் — ரோட்டு—சாலை—ஆஸ்பத்திரி— எப்பொழுது பார்த்தாலும் இந்தப் பல்லவிதானா? நானும்தான் சொல்லியிருக்கிறேன் மந்திரியிடத்திலே! அவர் கவனித்தால் தானே? நானென்ன செய்வது?"

"ஏன் தம்பீ, இதோ பார் மனசைத் திறந்தே கேட்கிறேன், இரவும் பகலும் எந்த வேளையிலும் நான் பொதுவேலையாகவே இருந்துவிட்டால் என் குடும்பம் போகிறகதிஎன்ன? என் குடும்பம் என்ன மண்ணையா தின்னும்? இல்லை நான் கேட்கிறேன் என்னதான் ஆவது என் குடும்பம்?"

'சே! சே! இந்த ஜனங்களுக்குக் கொஞ்சங்கூடப் புத்தியே கிடையாது சார்! ஏதோ எலக்ஷன்லே ஜெயிக்கிறதுக்காக அதைச் செய்வேன் இதைச் செய்வேன்னு ஒப்புக்குச் சொன்னா, அதையெல்லாம் அப்படியேவா நம்பிக்கொள்வது?

இங்கிதம்—பண்பாடு—நாகரிகம் எதையுமே காணோமே நம்ம மக்களிடம்?"

தேர்தல் முடிந்த பிறகு, எம். எல். ஏ, இந்த விதமாகத்தான் பேசுவார்.

பணிவார், குழைவார், கும்பிடுவார், கூத்தாடுவார், பல்லெல்லாம் தெரியக்காட்டிப்பரிதாபச் சிந்து பாடுவார், பாதங்களைப் பிடித்துக்கொண்டு பக்தனும் என்னைக் காத்தருளும் என்று புதிய பாகவதம் வாசிப்பார்—இவையெல்லாம் தேர்தலுக்கு முன்பு!

சீறிப் பாய்வார், சினத்தைக் கக்குவார், சிடுசிடெனப் பேசுவார், சிறுத்தை போல் உறுமுவார், சீ சீ போங்களென்பார், வேறு வேலை கிடையாதா என வெறுப்புப் புயலைக் கிளப்புவார், ஈட்டிபோன்ற மொழிகளை எடுத்தெடுத்து வீசுவார்—இவையெல்லாம் தேர்தலுக்குப் பின்பு!

அன்பு, அடக்கம், அமைதி—இவை, தேர்தலுக்கு முன்பு!

ஆத்திரம், ஆவேசம், ஆக்ரோஷம்—இவை தேர்தலுக்குப் பின்பு!

"வாருங்கள் வாருங்கள் உங்களைத்தான் தேடிக்கொண்டிருக்கிறேன்"—எம். எல். ஏ, ஆவதற்கு முன் நாள் வரை, இப்படி!

"யாரையா அங்கே இந்நேரத்தில்? வேலை நாழி கிடையாதோ இங்கே வருவதற்கு? இன்று போய் நாளைவாரும்"—எம்.எல்.ஏ. ஆனதற்கு அடுத்த நாள் முதல், இப்படி!

தேர்தல் முடிகிற வரையிலே விழுந்து வணங்குவதும்பணிந்து வேண்டுவதும், தேர்தல் முடிந்துவிட்டால், எடுத்தேன் கவிழ்த்தேன் எனப் பேசுவதும் யாரையா நீ என ஏசுவதும், தேர்தல் ஜோதியிலேபிரகாசிக்க விரும்புபவர்கள், நெடுங்காலமாகக் கையாண்டு வருகிற பழைய தந்திரம்.

அந்தப்பழைய தந்திரத்தைத் தான் அண்மையில் நடைபெறவிருக்கிற புதிய தேர்தலிலேயும் கையாளத் தயார் கூறி நிற்கிறார்கள் நம் மதிப்பிற்குரிய காங்கிரஸ் கண்ணியவான்கள்.

"பொதுக்கூட்டமா—போடு 144!"

"அரசியல் ஊர்வலமா—அனுமதி கிடையாது என்று கூறிவிடு!"

"புதிய பத்திரிகையா—கேள் பத்தாயிரம் ஜாமீன்!"

"ஆட்சிப் பீடத்தாரின் குறைகளை அடுக்கடுக்காகக் கூறுகிறார்களா? கொண்டுபோய் அடைகாராக்கிருகத்தில்!"

"ஆறவுன்ஸ் போதுமா என அடிமூச்சுக்குரலால் கேட்கிறார்களா — அடித்து நொறுக்குவோம் ஜாக்கிரதை என மிரட்டு!"

இப்படியெல்லாம்தான் வீரகர்ஜனை புரிந்துகொண்டிருந்தார்கள் காங்கிரஸ் விவேக சிந்தாமணிகள் சென்ற ஐந்து ஆண்டுகளாக.

அப்போதெல்லாம் அவர்களுக்குத் தேர்தலைப் பற்றிய கவனமில்லை. ஆகவேதான் பொது மக்களைப் புழுக்கள் போலத் துடிக்கவைத்தார்கள்.

இப்போதோ தேர்தல் வருகிறது—இனி அப்படியெல்லாம் பேசமுடியுமா—பேசினால் அவர்களுக்கு ஓட்டு கிடைக்குமா—கிடைக்காவிட்டால் மந்திரி நாற்காலியில் மீண்டும் அவர்கள் அமர முடியுமா—ஆகவேதான் ஆச்சரியகரமான மாறுதலை அடைந்திருக்கின்றன ஆளவந்தார்களின் இன்றைய பேச்சும் போக்கும்!

அவர்களுடைய பேச்சிலே முன்னெல்லாம் கடுங்கோபம் கொப்பளிக்கும். இப்போதோ தென்றல் தவழ்கிறது.

அவர்களுடைய பார்வையிலே முன்னெல்லாம் அனல் வாடை வீசும். இப்போதோ குளிர்ச்சியும் இன்பமும் ஒருங்கே காணப்படுகின்றன.

அவர்களுடைய நடத்தையிலே முன்னெல்லாம் பொது மக்கள் என்றாலே ஒருவகை வெறுப்பு தாண்டவமாடும். இப்போதோ, மக்கள் மன்றத்தைக் கண்டால் மட்டற்ற மகிழ்ச்சி அடைவதுபோல நடிக்கத் தொடங்கியிருக்கின்றனர்.

சிடுசிடுப்பு மொழியைத் தவிர வேறு மொழி ஏதும் பேசியறியாத கோபக்கார கோபால செட்டியார்கூட இதுபோது இங்கிதமாகவும் இனிமையாகவும் பேசத் துவங்கியிருக்கிறார்.

எதிர்க்கட்சிகள் மீது ஏளன வார்த்தைகளைப் பொழிவதையே தன்னுடைய தனிப் பெருங் கடமையாகக் கொண்டிருக்கும் மல்லையாளத்து மாவீரர் மாதவனார்கூட இந்நாளில் சற்று குழைவாகவும் பணிவாகவும் தான் வார்த்தைகளை எடுத்து வீசுகிறார்.

மக்கள் மன்றமா — அதைப் பற்றி எனக்கென்ன கவலை என்று பேசாமற் பேசிவந்த "பேரறிவாளர்" பக்தவத்சலனார்கூட இந்தச் சமயத்தில் மக்கள் நன்மைக்காக மக்களால் நடத்தப்பட்டுவரும் மக்கள் ஆட்சி அல்லவா எங்கள் ஆட்சி என்று மனம் துணிந்து பேசத் தொடங்கியிருக்கிறார்.

உண்மையாகவே, "தேர்தல் காய்ச்சல்", ஆளவந்தவர்களின் உள்ளப் போக்கையும் உரையாடலின் தன்மையையும் மகத்தான அளவுக்கு மாறு

(12-பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

பெருங் கொடுமை!—பேசினார் ஜவகர் முன்பு.

இழுத்துப் பூட்டு பத்திரிகை நிலையங்களை! கேட்டு வாங்கு பத்தாயிரம் ஜாமீன்! உடைத்துப் போடு எழுது கோல்களை! விரைவாகச் செலுத்து ஆசிரியர்களைச் சிறைக் கோட்டத்திற்கு!—கட்டளையிடுகிறார் பண்டிதர் இன்று!

* * *

"கள்ளச் சந்தையிலே வாணிபம் செய்பவர்கள் கழுத்தை முறிக்கும் கயவர்களைவிடக் கேவலமானவர்கள். என்னிடத்திலே மட்டும் ஆட்சிப் பொறுப்பு ஒப்படைக்கப்படுமானால் கள்ள மார்க்கெட் கயவர்களைத் தூக்குமேடையில் ஏற்றிவிட்டுத்தான் மறுவேலை பார்ப்பேன்." என்று தீப்பொறி பறக்கப் பேசி இந்தியாவைத் திடுக்கிட வைத்துவிட்டார் பண்டிதர் ஒரு சமயம். அவர் அப்படிப் பேசி முடித்த ஒரு சில நாட்களுக்குள்ளாக, அவரைச்சோதிப்பதற்கென்றோ என்னவோ, திடீரென்று, இந்தியப் பிரதமர் பதவி, அவரைக் கட்டித் தழுவி முத்தமிடலாயிற்று. அவர் முன்னாளில் செய்துகொண்ட சபதத்தை நிறைவேற்றப் பொன்னான வாய்ப்பாகக்கிடைத்தது இந்தப் பதவி! வாய்ப்புக் கிடைத்ததும், மனம் மிக மகிழ்ந்து, கள்ளச் சந்தைக் கயவர்களைத் தூக்கு மேடையில் தொங்கவிட்டாரா ஜவகர்? உரைத்த சூளினை நிறைவேற்றிக் காட்டினாரா? இல்லை! கருப்புச் சந்தைக்கழுகுகளுடன் கொஞ்சி விளையாடலானார். அவர்கள் அளித்தபணமுடிப்புக்களை ஆசையுடன் பெற்று ஆனந்தகீதம் பாடலானார்.

* * *

"ஹிந்து அல்ல—ஹிந்துஸ்தானிதான் இந்தியாவின் பொது மொழியாக இருக்கவேண்டும்—அதுதான் அண்ணல் காந்தியடிகளின் அருமை இலட்சியம்—அதுவேதான் என் இதயத்தைக் கவர்ந்த இன்ப இலட்சியமும் ஆகும்" என்று எண்ணற்ற முறை பேசியதுண்டு பண்டிதர். ஆனால் அரசியல் அமைப்பு மன்றத்தில், இந்தியா—இந்துஸ்தானியா—எந்த மொழி இந்தியாவின் பொதுமொழியாக இருக்க வேண்டும் என்கிற பிரச்சினை ஆலோசனைக்கு வந்தபோது, இந்துஸ்தானியை ஆதரித்து முழுமூச்சுடன் ஈடுபடத் தவறிவிட்டார் ஜவகர். நானென்ன செய்வது—பிறரெல்லாம் இந்தியைத்தான் விரும்புகிறார்கள்—இந்துஸ்தானியை எதிர்ப்பவர்களோ ஏராளம்—இந்நிலையில் நானெப்படி இந்துஸ்தானியை வற்புறுத்தமுடியும் என்று இலேசாகப் பேசி எளிதாக இந்துஸ்தானியைக் கைசோர விட்டுவிட்டார் பண்டிதர். "இந்திப் பிரசார சபா என்ற இருந்த பெயர்களைக் கூட இந்துஸ்தானி பிரசாரசபா என்று மாற்றி அமைத்திருக்கிறார் காந்திஜி இந்துஸ்தானியின் மீது காந்திஜிக்கு இருந்த பிரேமையும் பற்றுதலும் அவ்வளவு அதிகம். எனக்கும் அப்படித்தான்" என்று நூற்றுக் கணக்கான மேடைகளிலே ஓயாமல் பேசிவந்த பண்டிதர், இந்துஸ்தானிக்கு ஆதிக்கம் தேடித்தர வேண்டிய நேரத்திலே மௌனவிரதம் பூண்டுவிட்டார். சொல்லாலே ஆதரித்தார் இந்துஸ்தானியை. ஆனால் செயலாலே விரட்டியடித்தார் அந்த மொழியை. சொல் அப்படி! செயல் இப்படி! எப்படி முன்னேறுவது நம்முடைய நாடு நம்முடைய முதலமைச்சர் இப்படியிருந்தால்!

* * *

"இந்தியாவின் ஆட்சி மதச் சார்பற்ற ஆட்சி"

"இந்திய சர்க்கார் எந்த ஒரு தனிப்பட்ட மதத்தையும் ஆதரிக்காத சர்க்கார்."

"என்னிடத்திலே அதிகாரம் இருக்கும் வரையிலே, இந்திய ஆட்சி மதப்பற்றற்ற ஆட்சியாகத்தான் இருக்கமுடியும்." அப்படி இருந்தால்தான் இந்தியா இன்பபுரியை விரைவில் அடையமுடியும்."

பண்டிதநேரு பலமுறை இப்படிப் பேசியிருக்கிறார்.

ஆனால் உண்மையிலே தன்னுடைய ஆட்சியை மதப்பற்றற்ற ஆட்சியாகவா நடத்தி வருகிறார் பண்டித நேரு?

அதுதான் இல்லை!

1947 ஆகஸ்டு 15 ஆம் நாள் முதல் இன்றையவரை, எண்ணற்ற சமயங்களிலே, பண்டிதரின் ஆட்சி, இந்துமத ஆச்சார அனுஷ்டானங்களை அப்பழுக்கின்றிக் கடைப்பிடித்து வாழ்கின்ற பச்சைப் புரோகித ஆட்சியாகவே இருந்து வந்திருக்கிறது.

ஆகஸ்டு 15-ம் நாளின் காலை நேரம் இந்துமத சாஸ்திர சாம்பிரதாயங்களின்படி 'நல்லநேரம்' அல்ல என்ற காரணத்திற்காக ஆகஸ்டு 14-ம் நாள் நள்ளிரவு 12மணிக்கே இந்தியாவின் "சுயராஜப"த்தைத் தொடங்கிவைத்தார் பண்டிதர். இதற்குப் பெயர்தான் மதப்பற்றற்ற ஆட்சி முறையா?

ஜல உஷா ஜல ஜவஹர், ஜல பிரபா போன்ற பல புதிய கப்பல்களை, ஆட்சியாளர்கள், முதல் முதலாக நீரில் மிதக்கவிட்டு "வெள்ளோட்ட விழா" கொண்டாடிய நேரத்தில்; அந்தக்கப்பல்களுக்கு எதிரே இந்துமதப் புரோகிதர்களை அமர்த்திவைத்து, அவர்களைக் கொண்டு இந்துமத சம்பிரதாயப்படி, தேங்காய் உடைத்துக்கர்ப்பூரம் கொளுத்திச் சாம்பிராணியைப் புகைத்து ஓமம் வளர்த்தி வேத

கோஷங்களை முழங்க வைத்தாரே பண்டித நேரு, இதற்குப் பெயரும் மதப்பற்றற்ற ஆட்சி தானா?

ஆட்சியாளர்கள் வெளியிடுகின்ற தபால் தலைகள் ஒவ்வொன்றிலும் திருமூர்த்தி அல்லது மஹா விஷ்ணு அல்லது நடன சபாபதி என்று இந்த விதத்திலே மதக் கடவுளர்களின் உருவங்கள் தெளிவாகப் பொறிக்கப்பட்டிருக்கின்றனவே இந்தச் செய்கைக்குரிய பெயர் தான் மதப்பற்றற்ற ஆட்சிமுறை என்பதா?

சென்னை ஆட்சியாளர்களின் அடையாளச் சின்னமாக இந்து மதக் கோயிலின் கோபுர உருவம் தெரிந்தெடுக்கப்பட்டு, ஆட்சியாளர்களின் முத்திரையாக அது பயன்படுத்தப்படுவதைக் கண்டும், அதனைக் கண்டித்து ஒதுக்காமல், ஆனந்தத்துடன் அதை ஒப்புக்கொண்டு, பூரிப்புடன் பவனி வருகிறாரே பண்டிதர், இந்தப் பூணாரம் பூண்டபுதுமைக்கும் பெயர் மதப்பற்றற்ற ஆட்சிமுறை என்பதுதானா?

இந்துமதக் கோயில்களில் ஒன்றாகிய சோமநாதபுர ஆலயத்தைத் திருத்தி அமைப்பதற்காக இந்திய ஆட்சியாளர்களின் நேரமும் பணமும் சிந்தனையும் செல்வாக்கும் ஏராளமாகச் செலவழிக்கப்பட்டனவே, இந்தப் "பணம் பாழாகிய படலத்"திற்கும் மதப்பற்றற்ற ஆட்சிமுறை என்றுதானா பெயர்?

"எந்த மதத்தையும் சேராத நடுநிலை ஆட்சி எங்களுடையது" —இது, பண்டிதரின் பேச்சு.

"இந்துமதவைதீகப்புரோகித ஆட்சி எங்களுடையது"—இது பண்டிதரின் செயல்.

பேச்சு! செயல்! இரண்டிற்குமிடையே எவ்வளவு வேறுபாடு!

* * *

'பெண்கள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் வழிவகுக்கும் மசோதா இது! இந்த மசோதாவை எங்கள் மந்திரி சபையின் செல்வாக்கை அளந்துகாட்டும் கருவியாக நான் கருதுகிறேன். எந்தக் காரணத்தாலாவது இந்த மசோதா இந்தப் பாராளுமன்றத்தில் நிறைவேறாமற் போகுமானால் நாங்கள் உடனே ராஜினமா செய்துவிடுவோம்" என்று பண்டித நேரு, இந்துச் சட்ட மசோதாவை முன்னால் நிறுத்தி வீரமுழக்கம் செய்து காட்டினார் நான்கைந்து திங்களுக்கு முன்னால். இந்தத் திங்களின்போது, மசோதா உண்மையாகவே கைவிடப்பட்டுவிட்டது. ராஜினமா செய்தாரா ஜவகர்? முன்னால் உரைத்த பொன்மொழியின்படி நடந்துகாட்டினாரா? இல்லை! கிடையாது!

* * *

அடுக்கடுக்காக உதாரணங்களை அழகழகாக எடுத்துக்காட்டுவதைவிட, டண்டித நேருவின் சொல்லுக்கும் செயலுக்குமிடையே நிரந்தரமான விவாகரத்து ஏற்பட்டு நெடுங்காலமாகிவிட்டது என்று சொன்னால் போதும், உண்மை தெளிவாக விளங்கிவிடும்.

பண்டித நேரு ஒரு வீரர், விவேகி, சிந்தனைச் சிற்பி, சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுப் படைவீரர், முற்போக்குவாதி—சொல் அளவில்!

அன்பர் ஜவகர் ஒரு பிற்போக்கு வாதி, பழமையின் தோழர், வைதீகத்தின் காவலர், புரோகிதர்களின் நண்பர், பஞ்சாங்கப் பட்டாளத்தின் நிரந்தரமான தளபதி — செயல் துறையில்!

பிரதமர் ஜவகர், தன்னுடைய வாழ்க்கையைத் தானே எழுதியிருக்கிறார் ஏறத்தாழ அறுநூறு பக்கங்கள் கொண்ட பெரியதோர் புத்தகமாக.

அறுநூறு பக்கங்களில் மிக விளக்கமாகத் தீட்டப்பட்டிருக்கிற அவருடைய முப்பதாண்டுக் காலப் பொது வாழ்வை ஐந்தே சொற்களில் மிகச் சுருக்கமாக அடக்கிக் கூறமுடியும் நம்மால்.

முன்போக்குவாதி-சொல்லால்!

ஆனால்

பிற்போக்குவாதி—செயலால்!

ஆம்! இந்த ஐந்து சொற்களில்தான் உலவுகிறார் உண்மைப் பண்டித நேரு!

காங்கிரஸ் தலைவர் நேரு, டாக்டர் ஜெகில்போல ஜொலிக்கிறார், மேடைமீது காட்சிதரும் போது! ஆனால் மிஸ்டர் ஹைட் போல இருண்டுவிடுகிறார் கீழே இறங்கிவிட்ட பிறகு!

இதுதான் உண்மை!

இல்லையென்று கூறமுடியுமா யாராவது?

நாம் கேட்கிறோம்-முடியுமா?

---

* தீவிரமான கருத்துக் கோவை!
* முன்னேற்ற எண்ணங்களின் முன்னணி!
* கண்ணியம் நிறைந்த கண்டனங்கள்!

ஒவ்வொரு வார

"போராட்டம்" இதழிலும் திகழ்கின்றன.

விவரங்கட்கு:—போராட்டம்

திருவத்திபுரம், வ. ஆ மாவட்டம்.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

தல் அடையும்படி செய்திருக்கிறது.

தேர்தல் காய்ச்சல் கடுமையாக அடிக்கத் தொடங்கிய நாளிலிருந்து அமைச்சர்கள் அன்பு மொழிகளையே பேசுகிறார்கள். குழைவும் பணிவுமே தங்கள் பிறவிப் பண்புகளெனப் பிறர் நம்பும்படி நடிக்கிறார்கள். பொதுமக்களின் நன்மைக்காகவே தாங்கள் பொதுத் தேர்தலுக்கு நிற்பதாகக் காட்டிக்கொள்கிறார்கள். அல்லும் பகலும் எந்த நேரமும் தாங்கள் நாடும் மக்களும் நலமடைவதெப்படி என்பதற்கான திட்டங்களையே தீட்டிக்கொண்டிருப்பதாகத் திக்கெட்டும் சென்று தைரியமாகப் புது முரசு கொட்டுகிறார்கள். மக்கட் சமுதாயத்தைச் சென்ற ஐந்து ஆண்டுகளாக எட்டியும் பாராதிருந்தவர்கள் இப்போது ஓடோடியும் சென்று அவர்களைப் பார்த்து "க்ஷேமலாபம்" விசாரிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். மக்களை நாங்கள்—நாங்களே மக்கள் என்று மக்களை நோக்கி மயக்கமொழிகளை வீசி அவர்கள் உள்ளத்தைத் தங்கள் கட்சியெனும் பள்ளத்தில் வீழ்த்தப் பார்க்கிறார்கள்.

பொது மக்களைக் கண்டால், தேர்தலுக்கு முன்னாள் வரையிலே தாழ்ந்து பணிந்து வணங்குவதும், தேர்தல் முடிந்துவிட்டாலோ அவர்களை ஒதுக்கித் தள்ளி உதாசீனப் படுத்துவதும், தேர்தலுக்கு நிற்பவர்கள் நெடுங்காலமாகக் கையாண்டு வரும் மிகப் பழைய தந்திரம் என்பது பொதுமக்களுக்கு மிக நன்றாகத் தெரியும்.

அந்த உண்மை அவர்களுக்கு அவ்வளவாகத் தெரியாது என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்டிருக்கிறார்கள் ஊராளவந்தவர்கள். எனவேதான் அந்தப் பழைய தந்திரம் என்னும் கிழிந்துபோன வலையை விரித்துப் பொதுமக்களை ஏமாற்றிவிடலாம் என்று இன்னமும் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். பொது மக்கள் என்ன பச்சைக் குழந்தைகளா அவ்வளவு எளிதில் ஏமாந்துவிட?

பதிவு செய்யப்பட்ட இசை மன்றங்கள் நடனக் கழகங்கள் ஆகியவற்றால் நடத்தப்படும் இசைக் கச்சேரி நடனக் கச்சேரிகளுக்கு இனி பொழுது போக்கு வரி கிடையாது என்று, சென்ற வாரத்தில், அமைச்சர் கோபால ரெட்டியார் ஆநந்தத்துடன் அறிவித்திருக்கிறார். கலைவளர்ச்சி மன்றங்களுக்கு இனி வரி இல்லை என்பதைக் கேட்க உண்மையிலேயே நமக்கு மட்டற்ற மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. ஆனால் இந்த வரி நீக்கும் படலத்தைச் சென்ற ஐந்து ஆண்டுகளாகச் செய்யாமல் இருந்துவிட்டு, திடீரென்று, தேர்தல் புயல் வீசுகிற இந்தநேரமாகப் பார்த்துச் செய்துமுடித்திருக்கிறாரே தேசபக்தர் கோபாலனார், இப்படிச் செய்வதற்குப் பெயர்தான் தேர்தல் தந்திரம் என்று பொதுமக்கள் கூறத்தொடங்கினால், எப்படி அதை இல்லை என்று கூறமுடியும் இவரால்?

வேலை முடிந்து ஓய்வு பெற்றுள்ள சர்க்கார் ஊழியர்களின் பென்ஷன் தொகையை இனி ஓரளவு உயர்த்திக் கொடுப்பது என்றும் ஆட்சியாளர்கள் சென்ற கிழமை முடிவு செய்திருக்கிறார்கள். இந்த முடிவையும் ஆட்சியாளர்கள் இத்தனை ஆண்டுகளாகச் செய்யாமல் தேர்தல் நெருங்கிவரும் இந்த நெருக்கடி நேரத்தில் செய்துள்ள காரணத்தால் இதனையும் தேர்தல் தந்திரம் என்றே முடிவு கட்டுவார்கள் பொதுமக்கள்.

"பொதுக்கூட்டங்கள்—ஊர்வலங்கள் ஆகியவற்றைத் தாராளமாக நடக்கவிடுங்கள். கட்டாயமாகத் தடை விதித்தாகவேண்டிய நெருக்கடியான நிலை ஏதாவது இருந்தாலொழிய எந்தக் கூட்டத்திற்கும் தடை விதிக்காதீர்கள்" என்னும் பொருள் பொதிந்ததோர் சுற்றறிக்கையை, ஆட்சியாளர்கள், போலீஸ் அதிகாரிகளுக்கெல்லாம் இரண்டு வாரங்களுக்கு முன்பு அனுப்பியிருக்கிறார்கள்! தேர்தல் திருவிளையாடலிலே மற்றொரு பகுதி இந்தச் சுற்றறிக்கை! ஆம்! அப்படித்தான் எண்ணி அந்த அறிக்கையை எள்ளி நகையாடுகிறார்கள் பொதுமக்கள்!

பொதுக் கூட்டங்களுக்குத் தடை விதிக்காதீர்கள் என்று இந்த நெருக்கடிக் காலத்தில் இவர்கள் ஓர் சுற்றறிக்கையை விட்டுவிடுவதாலேயே கருத்துரிமையைக் காப்பாற்றும் கண்ணியர்கள் என்று யார் இவர்களை நம்பி ஏமாந்துவிடுவார்கள்? தெரியாதா நாட்டுக்கு இவர்கள் இதுவரை பிறப்பித்துள்ள நூற்றுக்கணக்கான 144 உத்தரவுகள்? அறியாதா மக்கள் மன்றம் இவர்களின் அதிகார மோகத்தால் எத்தனை பொதுக்கூட்டங்கள் நிறுத்தப்பட்டுவிட்டன என்பதை? மறந்தாவிட்டனர் மக்கள் குன்றத்தூர் கொடுமையை—நாரணமங்கலம் நிகழ்ச்சியை? அதிராம்பட்டினத்தில் 144, திருவாரூரில் 144, தஞ்சாவூரில் 144, சைதாப்பேட்டையில் 144, குன்றத்தூரில் 144, நாரணமங்கலத்தில் 144, சித்தையன் கோட்டையில் 144 என்று அடுக்கடுக்காக வெளிவந்த அடக்கு முறைப் பாணங்களை முற்றிலும் மறந்துபோகும் அளவு மாக்கட்டையா

தவா மாறிவிட்டது மக்கள் உள்ளம்? ஒரு பொதுக்கூட்டம் கூட்டமுயன்ற நன்முயற்சியைத் தவிர வேறு குற்றம் ஏதும் புரிந்தறியாத குன்றத்தூர்ப் பொது மக்கள் மீது எட்டுமுறை துப்பாக்கியால் சுட்ட கட்டழகர்கள் இந்த ஆட்சியாளர்கள் என்பதைத் திராவிட முன்னேற்றக் கழகம் மறந்தாலும், துப்பாக்கி வேட்டுக்காளான அந்தத் தூய நெஞ்சங்கள் மறந்தாலும், நாடு மறவாதே ஒரு நாளும! நாட்டில் உள்ள மக்களும் மறவாரே அச்சம்பவத்தை!

குன்றத்தூரில் பெருக்கெடுத்தோடிய குருதி வெள்ளத்தை—எண்ணற்ற ஊர்களில் நடத்தப்பட்ட தடியடி தர்பார்களை—எத்தனையோ கூட்டங்களுக்குப் போடப்பட்ட 144 உத்தரவுகளை — இவ்வளவையும் மக்கள் மனக்கண்ணிலிருந்து அகற்றிவிடும் ஆற்றல் ஒரு சாதாரண சுற்றறிக்கைக்கா ஏற்பட்டுவிட முடியும்.

ஆட்சிப் பீடத்தில் அமர்ந்து அரசோச்சிக் கொண்டிருந்த காலம் முழுவதும் அடக்குமுறை வெறியாட்டத்தை ஆனந்தமாக ஆடிக்கொண்டிருந்துவிட்டு, ஆட்சிப் பீடத்தைவிட்டுக் கீழே பிடித்துத் தள்ளப்பட இருக்கிற இந்தக் கடைசி வினாடியில், "பொதுக்கூட்டங்களுக்குத் தடை விதிக்காதீர்கள் போலீஸ்காரர்களே" என்று அடிமூச்சுக் குரலாலே புதிய கீதம் பாடிவிட்டால், யார்தான் ஆகட்டும், எப்படித்தான் ஏமாந்துவிடுவார்கள்?

தேர்தல் தொடங்குவதற்கு முன்னுள் வரையிலே கூனிக் குழைந்து கும்பிடு போடுகிற வழக்கமான தந்திரத்தைச் சேர்ந்த வசீகரமான பகுதி இது! அவ்வளவுதான்! வேறென்ன?

வழக்கமான இத் தந்திரத்தை விடாது கையாளத் தொடங்கியிருப்பவர்கள் சென்னை அமைச்சர்கள் மட்டுமல்ல, டில்லி அமைச்சர்கள் கூடத்தான்!

டில்லி அமைச்சர்கள் என்றால் அங்கே உலவுகிற சாதாரண அமைச்சர்களைக் குறிப்பிடுகிறோம் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள், பிரதமர் பீடத்தில் வீற்றிருக்கும் பெருமையும் புகழும் படைத்தவர் இருக்கிறாரே அவரைத்தான் குறிப்பிடுகிறோம்—ஆமாம்— ஆசிய ஜோதி என்று அவர்தம் கட்சித் தோழர்களால் அர்ச்சிக்கப்படும் பண்டித நேருவைத்தான் குறிப்பிடுகிறோம். மனிதருள் மாணிக்கம் என்று போற்றப்படும் அம் மாபெரும் தலைவர் கூடத்தான் சாமான்யர்கள் மட்டுமே கையாளவேண்டிய இந்தச் சாதாரண அரசியல் தந்திரத்தைக் கையாண்டு பார்த்திருக்கிறார் சென்ற வாரம்.

"இன்றையதினம் ஏற்பட்டுள்ள முக்கியமான பிரச்சினை அடுத்துவரும் தேர்தலிலே யார் வெற்றி பெறுகிறார்கள் யார் தோல்வியடைகிறார்கள் என்பது அல்ல, நிச்சயமாக அது அல்ல நம் முன் இருக்கும் பிரச்சினை. கோடிக் கணக்கான மக்களுடைய தோள்களைச் சித்திரவதை செய்து கொண்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் வறுமைக் கொடுமையையும் எப்படி ஒழித்துக் கட்டுவது என்பதுதான் நம்முடைய கவனத்தையெல்லாம் கவர வேண்டிய முதல்தரமான பிரச்சினையாகும். நாட்டிலே உற்பத்தியாகும் செல்வமெல்லாம் ஒரு சிலருடைய பணப் பெட்டிகளை நிரப்புவதற்கே பயன்படுகின்றன என்றால் எப்படியாவது அந்த நிலைமையை மாற்றி அமைத்தாக வேண்டியது நம்முடைய கடமையாகும்."

மறைந்த மகாத்மாவின் பிறந்த நாள் விழாவிலே பேசுகிறபோதுதான் மனிதருள் மாணிக்கம் இந்த வார்த்தை வைடூரியங்களை நம் மக்களுக்கு அளித்திருக்கிறது.

இந்த வார்த்தை வைடூரியங்களிலே ஜொலிப்பு இருக்கிறது— உண்மை! புது உலக ஆர்வமும் பொதுவுடைமை ஆவேசமும், பொங்கித் ததும்புகின்றன — அதுவும் உண்மைதான்! "இல்லையே—உணவில்லையே — கதியில்லையே — எனும் எளிமை — இனிமேல் இல்லை — எனவே, முரசறைவாய்' முரசறைவாய்" என்கிற கவிதையின் கருத்து நிழலாடுகிறது இந்தச் சொற்களில்—உண்மைதான் இதுவும்! மறுப்பாரில்லை! ஆனால் அன்பர் ஜவஹர்லால், அவர் ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருந்த சென்ற ஐந்து ஆண்டுக் காலத்தில் ஒருநாள் கூட இந்த விவேக சிந்தாமணியை வாசித்ததில்லையே—தேர்தல் முரசு கொட்டப்படுகிற இந்த நெருக்கடி நேரத்தில்தானே வாசிக்கிறார்— இதுநாள்வரை இவருடைய உள்ளம், காஷ்மீர், அகில உலக அரசியல், இந்தோனேஷ்யா, பந்தோடஸ்து சபை, சீனாவும் திபேத்தும் என்று எங்கெங்கெல்லாமோ பறந்து சென்று பவனி வந்தபடி இருந்ததே தவிர ஏழைப் பாட்டாளிகளை வாட்டி வதைக்கும் வறுமைக் கொடுமையைப் பற்றி சிறிது நேரமும் எண்ணிப் பார்த்தது கிடையாதே — அப்படியிருக்க இந்தக் கடைசி நேரத்தில் மட்டும் பொதுவுடைமை புதுவாழ்வு, வறுமை ஒழிப்பு என்று இவர் சமதர்ம சங்கீதம் பாடத் தொடங்கினால். அந்தக் கீதத்திலே நாதம் வேண்டுமானால் இருக்க முடியுமே தவிர நாணயம் எப்படி இருக்க முடியும்?

ஐந்து ஆண்டுகள் ஆட்சித் தலைவராக இருந்திருக்கிறார் நேரு. ஆனால் பாட்டாளிகளின் பரிதாப நிலையை மாற்றி அமைக்க அவர் தன் சுட்டு விரலையும் அசைத்தது கிடையாது அந்தக் காலத்தில்! இப்போது பேசுகிறார் வறுமையை ஒழிப்பதுதான் நம்முடைய முதற் பெரும் வேலை என்று! நாணயமானதுதானா இந்தப் போக்கு?

இந்தப் பேச்சும் போக்கும் வறுமையால் வாடிக் கிடப்போரின் வாக்குகளைத் தட்டிப் பறிப்பதற்

(5-ம் பக்கம் பார்க்க)

பம்மல் தமிழர் மன்றம்

முதலாண்டு விழா

பல்லாவரத்தை அடுத்த பம்மல் மந்தவெளி மைதானத்தில் 14—10—51 ஞாயிறு மாலை 5-மணிக்கு நடைபெறும்,

தலைவர்:

எம். கே. நவநீதம் எம். சி.

மறைமலையடிகள் படத்திறப்பு

கா. அப்பாதுரை எம்.ஏ. எல்.டி.

பேச்சாளர்கள்:

என். ஜீவரத்தினம் எம். சி.

மா. இளஞ்செழியன் B.A. Hons.



பதின்மூன்றும் பகுதி

புலி வயிற்றில் பூனை !

பரிவின்பா!...முல்லையின் மன்னராகிய அவரைப்பற்றி மக்களிடம் விசாரித்தேன். மக்களின் வறுமையைப் போக்க அவர் முயற்சிகள் எடுக்கவில்லையா என்றெல்லாம் விசாரித்தேன். மக்கள் எப்படி பதில் கூறினார்கள் தெரியுமா? தூற்றினார்கள் அவரை! இரக்கமில்லாத அரக்க நெஞ்சம் படைத்தவன்! புலியின் வயிற்றில் பிறந்த பூனை! பூசுரனின் கைப் பொம்மை! ......என்றெல்லாம் தான் கூறினார்கள்! எனக்கு வியப்பாகவும் வேதனையாகவும் தானிருந்தது!... ஆரியம் எந்த அளவுக்கு அவரை அடக்கி அடிமையாக்கி வைத்திருந்தது, புலியைப் பார்ப்பனியம் எப்படி பூனையாக்கி வைத்துள்ளது என்பவைகளை மக்கள் கூறக் கேட்ட நான் பல்லை நற நறவென்று கடித்துக் கொண்டேன்! ...... நஞ்சநாதனின் உருவமும், பாஷாண பூபதியின் உருவமும் என் கண் முன் தோன்றி மறைந்தன!......

ஓர் நாட் காலை நான் அரசரைச் சந்திக்க நேரிட்டது! ஆம். என் அன்பு நண்பர் ஈன்றெடுத்த இளஞ் சிங்கத்தைச் சந்தித்தேன். நான் யாரென்பதை அறிவித்தேன். எனக்கும் அவர் தந்தைக்குமிடையே நிலவிவந்த நட்பைப்பற்றிக் கூறினேன். என் வரலாறு பூராவையும் கண்ணீரோடு கூறினேன். வஞ்சகர்களின் சூழ்ச்சியைப்பற்றியெல்லாம் விளக்கமாகக் கூறினேன். முல்லை மக்கள், மன்னராகிய அவர் மீது கொண்டுள்ள எண்ணங்களை பெயர்த்துரைத்தேன். ஆரியனின் ஆதிக்கத்தை அகற்றச் சொன்னேன்! வீரத் தமிழருக்கு வாழ்வளிக்குமாறு வேண்டினேன். மன்றாடிக் கேட்டேன்.

அவர்மனம்மாறிற்று? அவர் உள்ளத்தில் உணர்ச்சி ஏற்பட்டதா? இனப்பற்று உண்டாயிற்று. ஆரியத்தை அவர் அறிந்துகொண்டாரா, என்று கேட்கிறாயா தம்பி!

தம்பி!...என் வார்த்தைகள்—வேதனையாலும் வருத்தத்தாலும் உண்டாக்கப்பட்டுக் கண்ணீராலும் உதிரத்தாலும் மெருகேற்றப் பட்டு அவருக்குப் படைக்கப்பட்ட படையல்கள்—அவர் உள்ளத்தை மாற்றவில்லை! அவை போலிச்சரக்குகளென எண்ணிவிட்டார் அவர். ஆரியத்தை இகழ்ந்த என்னை, இனப்பற்று வேண்டுமென உரைத்த என்னை, மக்களுக்கு நலம் பயக்கும் திட்டங்களைத் தீட்டச்சொன்ன என்னை,

"ஏ அற்பனே! அயோக்கியனே! அறிவிலியே! ஆணவம் பிடித்தவனே! ஆரியத்தைத் தூற்றுவதையே தொழிலாகக் கொண்டவனே! பூதேவர்களின் பெருமையை யறியாதவனே! வகுப்புவாதியே!...... வீணர்களுக்காக என்னிடம் வாதாட வந்து விட்டாயா?...... பொய்க் கதைகளையும் போலிச் சரக்குகளையுமா என்னிடம் கொட்டிப் பார்க்கிறாயா?......என் கண் முன்னே நிற்காதே! ஓடிப்போ!... இல்லையேல் கொன்று போட்டு விடுவேன்!..." என்று ஆவேசத்துடன் பேசினார்.

நான் அவ்விடத்தைவிட்டு அசையவில்லை, கண்ணீரைத் தேக்கிய படி நின்றுகொண்டிருந்தேன்! மீண்டும், "ஆரியத்தை நம்பாதீர் ஆதிக்கவாதியின் அடிபணியாதீர்!" என அறிவுரை பகன்றேன்.

பரிவின்பா!...நான் சொல்லி முடித்ததுதான் தாமதம். பளார், பளார் என்று என் கன்னங்களில் இரு அறை கொடுத்தார் அவர்!

"ஆ! அய்யோ! ஆரியம் உமமை இந்த நிலைக்குக் கொண்டுவந்துவிட்டிருக்கிறதே!..." என்று கத்தினேன்.

தம்பி!...ஐம்பது வயதுடைய என்னை அந்த இருபது வயது இளைஞர் சாட்டையால் கையப்புடைத்துச் சென்றுவிட்டார்!...ஆம். அது ஆரியம் ஒரு விபீஷணனின் மூலமாக எனக்குத் தந்த வெகுமானம்!...

அவரின் இந்தப் போக்கு கண்டு நான் மிகுந்த வருத்தங்கொண்டேன்! வேதனையடைந்தேன்!...

பரிவின்பா!...ஒன்றைக்கூற மறந்தேனே!...ஆமாம். விக்கிரமன்!...நஞ்சநாதனை அரசவையில் அடியெடுத்து வைக்கச் செய்தவன், அவனை ஆதிக்கவாதியாக்கியவன், மன்னரைக் கொல்ல திட்டங்கள் தீட்டினவன், வஞ்சகனின் வலையிற் சிக்கி விபீடணனாக மாறியவன், துரோகத் திருவிளையாடல் புரிந்தவன், முல்லையின் மகுடத்திற்கு இலவு காத்திடும் கிளியாக, கொம்புத் தேனுக்கு ஆசைப்பட்ட முடவனாக இருந்தவன் நஞ்சநாதனாலேயே கொல்லப்பட்டுவிட்டான்!... கனபாடி செய்துவந்துள்ள கைங்கர்யங்களெல்லாவற்றையும் கண்டாயா தம்பி?...

தம்பி!...அவன் ஓர் அயோக்கியன்! ஆம். அவன் அழியவேண்டியது ஞாயந்தான்! அவன் மன்னனுக்குத் துரோகம் புரிந்தான். பூசுரன் அவனுக்குத் துரோகம் செய்தான்!...அவனும் புலிவயிற்றில் பிறந்து பின் பூனையாகப்போன ஓர் பேடிப்பயல்தான்!

பாலையிலும் இதே நிலைதான்! புலவேந்தி பாஷாண பூபதியின் கொட்டங்களும் அட்டகாசங்களும், சேஷ்டைகளும், சல்லாபங்களும் கொஞ்சம் நஞ்சமல்ல! அங்கும் மக்கள் நிலை முல்லையைப் போலத்தான்!...

தம்பி! மலர்மாலைகள் இரண்டும் இரண்டு மந்திகள் கைகளில் சிக்

டுக்கொண்டிருக்கின்றன!... ஆளத் தெரியாதவர்கள், ஆண்டறியாத பரம்பரையினர் ஆட்சிப்பீடமேறியுள்ளார்கள்! சூழ்ச்சிக்காரர்கள் சிம்மாதனமேறியிருக்கிறார்கள்! பதவிப் பேய்கள், பேராசைப் பித்துபிடித்த பிசாசுகள் பாலையிலும் முல்லையிலும் சேஷ்டைகள் புரிந்து வருகின்றன!...மருதமும், குறிஞ்சியும், நெய்தலும்கூட தங்கள் "குமபலின் ஆட்சி"க்கு உட்பட்டிருக்கவேண்டுமென்ற ஆசை அவர்களுக்கிருந்து வருகிறது! அதற்காகத்தான் பல சூழ்ச்சிகள் நடந்துவருகின்றன. எனக்கு அது நன்ருகத் தெரிகின்றது! ஏன்?... நீ பாலையில் அந்த வைபவம் நடந்து முடிந்ததும் தெரிந்துகொள்ளுவாய் ஆம். மருதம்; குறிஞ்சி, நெய்தல் நாடுகளைத் தங்கள் வயப்படுத்துவதற்காகவேதான் இந்த வைபவம்! மருதமும் குறிஞ்சியும் இன்று பாலைப் பூசுரனுடனும், முல்லை மதோன்மத்தனுடனும் நட்புகொண்டிருந்து வருகின்றன! அவைகள் அறியவேண்டும் பாலையின் நிலையையும் முல்லையின் நிலையையும்!—அவைகள் வரலாற்றையுங்கூட!

தம்பி! என்னுடைய ஒரே ஒரு ஆசை என்ன தெரியுமா?........ ஆமாம். அது உனக்குத் தெரிந்துவிட்டிருக்கும்!...... அந்தப் பூசுரர்கள் ஒழிக்கப்படவேண்டும் பூண்டோடு! முல்லை மக்களும் பாலைப் பிரஜைகளும் சுகமாக வாழ்வதை நான் கண்ணுரக் காணவேண்டும்! இதுதான் தம்பி என் ஆசை!......

நான், மருதம், குறிஞ்சி, நெய்தல்நாட்டு மன்னர்களிடம் சென்று உன்னிடம் இப்பொழுது கூறினேனே இந்த என் நீண்ட வரலாற்றைக் கூறி அவர்கள் உணர்ச்சியோடும், வீராவேசத்தோடும் எழுந்து இந்த அற்பர்களையழிக்கத் திட்டம் தீட்டவும் செய்யப்போகிறேன்! அப்பூசுரப் புல்லர்களை ஒழிக்க உன் போன்ற இளஞ் சிங்கங்கள்தான் தேவை! ஆமாம். நீயும் உன் மக்களுக்காக அந்த உரிமைப் போரில் பங்கு கொள்ள வேண்டும்!......தம்பி! பாலைக்குப் பத்திரமாகச் சென்று வா!...... நான் உன்னை நெய்தல் நாட்டில் அவசியம் சந்திக்கிறேன்!......

* * * *

கிழவன் தன் வரலாறு பூராவையும் பரிவின்பனுக்குக் கூறி, சில புத்திமதிகளையும் எடுத்துரைத்தான்.

பரிவின்பனின் கண்களிலே கோபக் கனல் வீசிற்று! கண்ணீரும் கசிந்து கொண்டிருந்தது! உணர்ச்சிகளால் உந்தப்பட்டுக் கொண்டிருந்தான் அவன்.

"பெரியாரே!......அந்த வீணர்களை நான் வீழ்த்தியே தீருவேன். ஆம். இன்று உம் முன் நான் சூள் உரைக்கிறேன்! சபதமேற்கிறேன்! உண்டவீட்டிற்கு இரண்டகம் செய்யும் உலுத்தர்களை, பாலூட்டிவளர்த்தவர்களையே தன் பற்களால் கடிக்கும் இப்பாம்புகள், வளர்த்தவர்கள் மார்பிலேயே பாயும் இக்கனபாடிக் கடாக்கள் தொலையத்தான் வேண்டும்! ஆம். அவர்கள் தொலைந்து போகும் நாள் தொலைதூரத்திலில்லை!......பெரியாரே! நான் விடைபெற்றுக் கொள்கிறேன்!... உம்மை நான் அவசியம் நெய்தல் நாட்டில் சந்திக்கிறேன்!..." என்று கூறி எழுந்தான்.

கிழவன், "கொஞ்சம் இரு பரிவின்பா!......ம்......தயவு செய்து உன் உடைவாளை என்னிடம் கொடு!..." என்றான்.

பரிவின்பன் கொடுத்தான்.

கிழவன் தன் இரு கைகளாலும்—முழு விரல்களற்ற கைகளினால் வாங்கி அதை அப்படியே பிடித்த வண்ணம், தன் தொடையிலே ஒரு கீறல் கீறினான். வற்றிப்போயிருந்த அவரது சதையிலிருந்து இரத்தம் வழிந்தோடிற்று.

பரிவின்பனுக்கு இது பெரும் வியப்பாக இருந்தது.

"பெரியாரே! என்ன இது?..." என்றான் பரிவின்பன்.

கிழவன் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் பரிவின்பனும் உதயனும் அந்தக் கேள்வியைக் கேட்டார்கள்.

கிழவன் அந்த உடைவாளைப் பரிவின்பனிடம் கொடுத்து "உன் தொடையில் ஒரு கீறலை உண்டாக்கிக் கொள்" என்றான்.

(தொடரும்)

நீங்கள் படித்துவிட்டீர்களா?

அதிசயத் தியாகிகள்	0	12
வாழமுடியாதவர்கள்	0	12
(மு. கருணாநிதி)		
கைதி (ஏ. கே. வேலன்)	1	4
டாக்டர் (துறைத்தம்பி)	1	0
சத்திய வீரன் ,,	1	0
கோவையில் கருணாநிதி	0	8
என் மகள் (சேரன்)	1	0
இன்ப இரவு	0	8
கலைக் கோயிலா	0	6
எமிலி ஜோலா (அண்ணா)	0	6
தீ பரவட்டும் ,,	0	8
தொழிலாளர் பிரச்சினையில் அண்ணா	0	6
சமுதாயப் புரட்சி (அண்ணா)	0	4
அண்ணா கண்ட தியாகராயர்	0	4
பைத்தியக்காரி	0	6
மனைவி மாற்றம்	0	8
எல்லைக்கப்பால்	0	8
(டி. கே. சீனிவாசன்)		
துன்பக் கதை ,,	0	8
கன்னியின் சபதம்	0	8
(ப. கண்ணன்)		
சிந்தனைச் சித்திரம் ,,	0	10
பொற்கூண்டு	0	6
மீண்டும் வந்தான்	0	6
விஷக் கன்னிகை	0	6
யார் இந்த ம. பொ. சி.	0	4
சமுதாய பலிபீடம்	0	4
ஆரூரார் உபதேசம்	0	12
திரு. வி. க. மணிமடல்	1	8
திராவிடம்	0	3
நாடும் ஏடும் (அண்ணா)	0	6
நல்ல தீர்ப்பு ,,	0	4
கழைக் கூத்தியின் காதல் (பாரதிதாசன்)	1	0
அண்ணா வர்ணனைகள்	0	4
அழகு நிலா (தணலன்)	1	0
செல்வ குமாரி ,,	1	0
ஆள்வோர் யார் ,,	0	4
வாத்தியாரம்மா	0	4
தாயும் சேயும்	0	8
பிரளய உலகம்	1	0
இந்தி பொது மொழியா	0	8
சுவாமிகாள்	0	4
குத்தூசி	0	4
ஆரியத்தால் விளைந்த கேடு	0	6
திராவிடம் என்றால் என்ன	0	6
கல்வி நீரோடை (செழியன்)	0	6
முதலாளித்துவம் ஒழிக	0	12

பகுத்தறிவுப் பாசறை
147, பவழக்காரத் தெரு சென்னை

திராவிட முன்னேற்றக் கழக

மாநில மாநாடு

சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. மைதானத்தில்

நவம்பர் இரண்டாவது வாரத்தில் நடைபெறும்

அனுப்புங்கள்

கிளைக் கழகங்களின் பெயர்களைப் பொறித்த 3'x2' அளவுள்ள கொடிகளை உடனே அனுப்புங்கள்:

★

இரண்டாண்டு காலத்தில் வெளி வந்துள்ள இயக்கச் சார்புடைய நூல்களை அனுப்புங்கள்:

காஞ்சி தலைமை நிலையத்திற்கு

இயக்கத்தின் முன்னணி வீரர்கள் இந்த வாரத்தில் பொதுச் செயலாளரைச் சென்னையில் சந்தித்துப் பேசிச் சென்றுள்ளனர்.

தோழர் இரா. நெடுஞ்செழியன் M.A., ஈ. வே. கி சம்பத், கி. மனோகரன் ஆகியோர் மாநாட்டு அலுவல்களைக் கவனிக்க சென்னைக்கு வந்துள்ளனர்.

புதிய நாடகங்கள் ஒத்திகை காஞ்சிபுரத்திலேயே நடைபெற ஏற்பாடாகி வருகிறது.

தி. மு. கழகத்தின் சார்பில் Board of Information & Publicity என்ற அமைப்பின் மூலம், மாநாடு குறித்தும், இயக்கத்தைப் பற்றியும், ஆங்கில வெளியீடுகள் வெளியிட்டு, அகில உலகமும் அறியச் செய்ய முயற்சி தொடங்கப்பட்டுள்ளது.

ஓவியக் கண்காட்சிக்கான சித்திரக்காரர்கள் காஞ்சி ராமச்சந்திரன், தருமபுரி பழனிசாமி, ஹரி, கடையநல்லூர் சண்முகம் ஆகியோர் காஞ்சியிலேயே தங்கி, பணியாற்றி வருகிறார்கள். ஓவியப் பகுதியில் இப்பொழுது விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் அவற்றைக் கண்டவர்களின் படங்களும், வானுலக விந்தைகளை விளக்கும் சித்திரங்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

விளம்பரக் குழு.

Edited Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar at Free Printe
147, Coral Merchant St., Madras, Joint-Editor M. Ilancheliyan B.A. (Hons)